# தவணைப் பரீட்சை, மார்ச்- 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) யூதர்களின் இலக்கிய நூல் எது?
   1. மிஸ்னா 2. தால்மூட் 3. செப்துவாஜித்
   4. வல்கேட் 5. தர்கும்.

2) "சுக்கோத்" எனப்படுவது,
   1. புளியாத அப்பப்பண்டிகை 2. உயிர்ப்பு விழா 3. கூடார விழா
   4. ஆலய அர்ப்பண விழா 5. பெந்தகோஸ்தே விழா

3) பெரிய ஏரோதின் காலம் எனப்படுவது,
   1. கி.மு 36 – கி.மு 3 2. கி.மு 37 – கி.மு 4 3. கி.மு 35 – கி.மு 6
   4. கி.மு 34 – கி.மு 2 5. கி.மு 30 – கி.மு 10

4) யூத நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய மொசப்பத்தேமிய நாகரிகத்தின் கூறுகளாகக் கொள்ளப்படாதது?
   1. கனவுக்குப் பொருள் கூறல்
   2. மனித மீட்புக்கு தெய்வங்களின் துணை அவசியம் என்ற நம்பிக்கை
   3. நாணயங்களின் பயன்பாடு
   4. தீய ஆவியை விரட்டுதல்.
   5. தந்தைக்கு பின்னர் மூத்த மகனுக்கே ஆட்சியுரிமை என்ற பண்பு.

5) பின்வரும் கூற்றுக்கள் எந்த இடத்தைக் குறித்து நிற்கின்றது?
   A - இது எருசலேமிலிருந்து 27.2 கி.மீ தூரத்தில் உள்ளது.
   B - கடல் மட்டத்திலிருந்து 800 அடி கீழே உள்ள நகரமாகும்.
   C - இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வந்து முதலில் கைப்பற்றிய நககர்
   D - இயேசு திருமுழுக்குப் பெற்றது. இதன் அருகில் உள்ள யோர்தான் ஆற்றிலேயாகும்.
   1. பெத்தானியா 2. ஒலிவமலை 3. எரிக்கோ
   4. எருசலேம் 5. எப்ரோன்

6) தாவீது அரசன் பற்றிய சரியான கூற்றுக்கள் எவை?
   A - அரச ஆட்சி கி.மு 1000 – கி.மு 962
   B - காலப்பகுதி கி.மு 962 – கி.மு 922
   C - வாணிபப் போக்குவரத்திற்காக செங்கடலோரத்தில் ஒரு துறைமுகம் கட்டினான்.
   D - 12 கோத்திரங்களுக்கும் அரசனானான்.
   1. AD 2. B 3. CD 4. AB 5. BC

agaram.lk

7) தென்னரசில் பணிபுரிந்த இறைவாக்கினர்கள்,

1. எசாயா, எரோமியா 2. எரேமியா, மீக்கா 3. ஆமோஸ், ஏசாயா
4. எலியா, மீக்காயா 5. எசாயா, மீக்கா

8) நீதித்தலைவர்கள் அடங்கியுள்ள கூட்டம் எது?

A - தெபோரா, இப்தா, சவுல்
B - சாலமோன், தாவீது, சிம்சோன்.
C - கிதியோன், தெபோரா, இப்தா
D - சிம்சோன், கோலியாத், அபிமெலேக்
E - இப்தா, கோலியாத், தெபோரா

1. A 2. C 3. E 4. B 5. D

9) உரோமைப் பேரரசின் கடைசிப் பேரரசர் யார்?

1. தியோக்கிளேசியன் 2. சவுல் 3. யூலியஸ் சீசர்
4. கல்பே 5. அகஸ்துஸ் சேசர்

10) இயேசு "நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்" எனக் கூறியது. குறித்து ஆகும்?

1. பிலிப்பு 2. அர்க்கெலா 3. ஏரோது அந்திப்பா
4. பெரிய ஏரோது 5. 1வது ஏரோது அக்ரிப்பா

11) அம் - ஹா – அரஸ் என அழைக்கப்பட்டவர்கள் யார்?

1. அடிமைகள் 2. சமாரியர் 3. பாவிகள்
4. ஏழைகள் 5. வரிதண்டுவோர்

12) ஜெருசலேம் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்ட காலப்பகுதி?

1. கி.பி 68 2. கி.பி 70 3. கி.பி 80 4. கி.பி 69 5. கி.பி 75

13) மிஸ்னா என்னும் நூலில் உள்ளடக்கப்படாதது எது?

1. குற்றவாளி தொடர்பாக இரண்டு சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப் வேண்டும்.
2. மரண தண்டனைத் தீர்ப்பாயின் இரு நாட்களின் பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்.
3. குற்றம் சாட்டப்பட்டவரின் வாய்மூலகத்தை வைத்து தீர்ப்பிடக்கூடாது.
4. திருவிழாக்காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு வேளைகளில் கூட்டப்பட வேண்டும்.
5. ஆலயத்தில் அதற்கான அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்.

14) "பரிசேயர்" என்பதன் பொருள்.

1. பிரிந்து நிற்பவர் 2. இணைந்து நிற்பவர் 3. சேர்ந்து நிற்பவர்
4. குழுவாக நிற்பவர் 5. சரியாக நிற்பவர்.

agaram.lk

15) எசீனியர் என்போர் :-

1. தனியான வாழ்க்கை வாழ்ந்தனர்.
2. தமது தலைவருக்கு கட்டுப்படாமல் வாழ்வோர்.
3. உடமைகள் அனைத்தும் தனியாக கொண்டிருந்தோர்.
4. கி.பி 5ம் நூற்றாண்டளவில் வாழ்ந்தோர்
5. மாலை வரை மீண்டும் வேலை செய்து இரவு உணவில் பங்கேற்பர்.

16) இயேசுவின் காலத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் / தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டோர்.

1. சமாரியர், பரிசேயர், சதுசேயர்
2. அடிமைகள், பரிசேயர், நடுத்தர வர்க்கத்தினர்.
3. அடிமைகள், பெண்கள், சமாரியர்.
4. பெண்கள், மூப்பர்கள், கட்டிடக்கலைஞர்கள்
5. பரிசேயர:, மூப்பர்கள், சமாரியர்.

17) “நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது பிற இனத்தவரைப் போல பிதற்ற வேண்டாம் ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிவார்.” என கற்பித்த இறைவாக்கினர்.

1. எலிசா 2. எலியா 3. யோவேல் 4. எசேக்கியேல் 5. எரேமியா

18) இறையாட்சியின் உவமைகளில் ஒன்று,

1. உதாரி மைந்தன் 2. 5 தாலந்து 3. புளிப்பு மாவு
4. விதைப்பவன் உவமை 5. 10 கன்னியர்

agaram.lk

19) “இறையாட்சி அனைத்து மக்களையும் வரவேற்கும் பராமரிக்கும் தன்மை கொண்டது என்பதை வெளிப்படுத்தும் புதுமை,

1. தண்ணீரை இரசமாக்குதல்.
2. கடல் கொந்தளிப்பை அடக்குதல்.
3. இறந்தோரை உயிர் பெறச் செய்தல்.
4. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்.
5. தீய ஆவிகளை விரட்டுதல்.

20) “தாழ்மையான பணித் தலைமைத்துவத்தின் அடையாளம்,

1. மலைப் பொழிவு 2. லேவியை அழைத்தது
3. சக்கேயுவைச் சந்தித்தது 4. விபச்சாரப் பெண்ணை மன்னித்தது.
5. சீடர்ளின் பாதங்களைக் கழுவியது.

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

❖ **பகுதி II இல் (அ) பகுதியிலிருந்து ஏதாவது இரண்டு வினாக்களுக்கும் (ஆ) பகுதியிலிருந்து ஏதாவது இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**(அ)**

*1)*

i. யூத நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய மொசப்பெத்தேமியா நாகரிகத்தின் கூறுகள் *04* குறிப்பிடுக?

ii. கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் *04* தருக?

iii. கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

iv. உரோமைய நாகரிகத்தில் "இலத்தின் மொழி" யின் செல்வாக்குப் பற்றி நான்கு கருத்துக்களில் முன்வைக்குக?

v. உரோமையர்களின் கட்டிடக்கலை அம்சங்கள் *04* இனை எழுதுக?

(4 x 5 = 20 புள்ளிகள்)

*2)*

i. பலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதியினை புவியியல் ரீதியாக பிரிக்கும் மூன்று பிரதேசங்களையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினது சிறப்பம்சங்கள் இரண்டு எழுதுக?

ii. இஸ்ராயன் வரலாற்றின் குலமுதுவர்களைக் குறிப்பிட்டு அவர்களின் பணிகளை எழுதுக?

iii. இஸ்ராயல் மக்கள் பபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்டதன் விளைவால் அவர்கள் இழந்த தனித்துவங்களை விளக்குக?

iv. யூத சமய – சமூக, கலாசார மறுமலர்ச்சிக்கு எஸ்ரா, நெகேமியாவின் பங்களிப்புக்களை விளக்குக?

v. பலஸ்தீனாவில் உரோமர் ஆட்சியில் குறுநில மன்னர்களாகச் செயற்பட்ட நால்வரைக் குறிப்பிடுக?

(4 x 5 = 20 புள்ளிகள்)

*3)*

i. இயேசுவின் காலத்தில் தலைமைக் குருக்களாக செயற்பட்டவர்கள் இருவரைக் குறிப்பிட்டு தலைமைக்குருக்களின் பணிகள் இரண்டு எழுதுக?

ii. எருசலேம் ஆலயத்தின் அமைப்புப் பற்றி நான்கு கருத்துக்களில் விளக்குக?

iii. யூதர்களின் சமய, சமூக வாழ்வில் தொழுகைக் கூடங்களின் முக்கியத்துவம் பற்றி விளக்குக?

iv. யூதர்களின் தலைமைச் சங்கத்தில் மிஸ்னா என்ற நூலில் குறிப்பிடப்படும் விடயங்கள் ஐந்து எழுதுக?

v. இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் வாழ்ந்த யூதர்களின் சமய மரபுகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(4 x 5 = 20 புள்ளிகள்)

agaram.lk

## (ஆ)

4)

i. இஸ்ராயல் மக்களின் எகிப்திய அடிமைத்தனத்தின் விடுதலைப் பயண நிகழ்வை விளக்குக?

ii. இன்று உலகிலே அடிமைத்தனத்திலிருக்கின்ற, ஒடுக்கப்படுகின்ற உரிமை வாழ்விழந்து தவிக்கின்ற மக்களுக்கு இஸ்ராயேல் மக்களின் விடுதலை உணர்த்தி நிற்கும் செய்திகளை விபரிக்குக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

5)

i. யூதர்கள் கொண்டாடி வந்த முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப் பற்றி விளக்குக?

ii. யூதர்கள் கொண்டாடிவந்த பிரதான விழாக்களுள் இரண்டு விழாக்கள் எவ்வாறு இன்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் கொண்டாடப்படுகின்றன என்பதை ஆராய்க?

(2 x 10 = 20 புள்ளிகள்)

6)

i. கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே என்பதன் அடிப்படையில் இறையாட்சியை மையப்படுத்திய இயேசுவின் புதிய சமூகப் பார்வை பற்றி விளக்குக?

ii. மலைப்பொழிவில் வரும் எட்டுப்பேறுகள் மூலமாக இயேசு தரும் படிப்பினைகள் இன்றைய சமுதாயத்தில் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பது பற்றி மதிப்பிடுக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

7)

i. இறையாட்சியின் தன்மையை விளக்கும் உவமைகள் நான்கு குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விளக்குக?

ii. இறையாட்சியின் அடையாளமாக இயேசு செய்த புதுமைகளின் வகைகளினை குறிப்பிட்டு இன்றைய உலகில் இறைவனின் வெளிப்படுத்தல் / பிரசன்னம் திருச்சபை பணியாளர்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்க?

(2 x 10 = 20 புள்ளிகள்)

agaram.lk